[குறிப்பு :—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. பணித்துறை வெளியீட்டிலிருந்து சில சொற்றொடர்களை நீக்கக் கோரிக்கை.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, the insinuating remarks made against the Hon. Speaker by the hon. Member, Thiru V. K. Kothandaraman, amount to contempt of the House and since the Hon. Speaker has not asked for the withdrawal of those remarks, I request the Hon. Speaker to order the expunction of those insiminuating remarks which should not find a place in the official proceedings?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' ஒழுங்காக இருந்தாலும், சில உறுப்பினர்கள் பேசுவது நடவடிக்கைக் குறிப்பிலிருந்தால், இவர்கள் என்னென்ன பேசினார்கள் என்று பின் ஒரு காலத்தில் தெரிந்துகொள்ள முடியும் என்று அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் குறிப்பிட்டதற்கு இணங்க நான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. அது குறிப்பிலேயே இருக்கட்டும்.

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) விவசாயிகளுக்கு நியாய விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்காமை.

(இ) தொழிலாளர்களுக்கு பஞ்சப்படியை சென்னை விலைவாசிப் புள்ளி விவரங்களுக்கு ஒப்ப நிர்ணயித்தல்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : திரு. ஏ. சுப்பராஜா அவர்கள் இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்களை, 19—6—1967, 20—6—1967 தேதியிட்டு கொடுத்திருக்கிறார்கள். அந்த இரண்டையும் படிக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : சார், தமிழகத்தில் கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு உணவு உற்பத்தி செய்துவரும் பல்லாயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் நியாய விலையில் உணவுப் பொருள் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க கிராமப்புறங்களில் உணவு விநியோக குடும்பக்கார்டுகள் வழங்கி பாதுகாக்க வேண்டும் என்று அரசாங்கக் கவனத்திற்குக் கொண்டுவர இந்த மன்றக் கூட்டத்தை ஒத்திவைத்து விவாதிக்கக் கோருகிறேன்.

அடுத்து, சென்னை விலைவாசியின் அடிப்படையில் விலைவாசிப் புள்ளியைக் குறைத்து, முதலாளிகள் பஞ்சப்படியைக் கணக்கிடத் தொடங்குவதால் தொழிலாளிக்கு ஏற்படும் அநீதியைப் போக்க அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கையைப் பற்றி விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முன்பே ஒருமுறை தெரிவித்தபடி, ஒரு பிரச்சினையைப் பற்றி விவாதிக்க வேறு வாய்ப்பு இருக்குமானால், அதற்காக இந்தப் பேரவையின் நடவடிக்கைகளைத்